# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 25.09.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல் ஃபுர்கானின் 64 முதல் 77 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

***அதன் பொருள்:*** *அளவற்ற அருளாள(னாகிய இறைவ)னின் (உண்மையான) அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பவராவர். அறிவற்றவர்கள் அவர்களுடன் (அறிவீனமாகப்) பேசினால் அவர்கள் சாந்தி எனக் கூறி(ச் சென்று) விடுவார்கள்.*

*மேலும் அவர்கள் தங்கள் இறைவனுக்காக சிரம்பணிந்தும் நின்றும் (வணங்கியவர்களாக) இரவுகளைக் கழிப்பார்கள்.*

*மேலும் அவர்கள், எங்கள் இறைவா! எங்களிடமிருந்து நரகத் தண்டனையை அகற்றி விடுவாயாக; ஏனெனில் அதன் தண்டனை ஒரு பெரும் வேதனையாகும் என்று கூறுவார்கள்.*

*நிச்சயமாக அது தற்காலிகமாகத் தங்குவதற்கும் நிரந்தரமாகத் தங்குவதற்கும் கெட்ட இடமாகும்.*

*மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும் போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள்.*

*மேலும் அவர்கள் அல்லாஹ்வுடன் வேறெந்த (பொய்க் கடவுளையும் அழைக்க மாட்டார்கள். மேலும் அல்லாஹ், (கொல்லக் கூடாது என்று) தடுத்த எவரையும் நியாயமான காரணமின்றி கொலை செய்யமாட்டார்கள். மேலும் அவர்கள் விபச்சாரம் செய்யமாட்டார்கள். இதனைச் செய்பவர் (தன்) பாவத்திற்குரிய தண்டனையைப் பெற்றுக் கொள்வார்.*

*மறுமை நாளில் அவருக்குப் பன்மடங்கு தண்டனை கொடுக்கப்படும். அதில் அவர் இழிவடைந்தவராகவே நெடுங்காலம் தங்குவார்.*

*கழிவிரக்கம் கொண்டு (மனந்திருந்தி) நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்வோர் நீங்கலாக. அல்லாஹ் இத்தகையோரின் தீய செயல்களை நற்செயல்களாக மாற்றுகின்றான். அல்லாஹ் மிக்க மன்னிப்போனும் மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவான்.*

*மேலும் கழிவிரக்க் கொண்டு நற்செயல் செய்கிறவர்கள் நிச்சயமாக (உண்மையாக) மனந்திருந்தி அல்லாஹ்விடம் திரும்புகின்றனர்.*

*மேலும் அவர்கள் பொய்ச்சாட்சி கூறமாட்டார்கள். மேலும் அவர்கள் ஏதாவது வீணானதைக் கடந்து செல்லும் போது (அதில் ஈடுபடாமல்) கண்ணியத்துடன் கடந்து சென்று விடுவார்கள்.*

*மேலும் அவர்களுக்கு அவர்களுடைய இறைவனின் வசனங்கள் நினைவூட்டப்படும் போது செவிடர்களைப் போன்றும், குருடர்களைப் போன்றும் அலட்சியமாக இருக்க மாட்டார்கள்.*

*மேலும் அவர்கள் எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக! மேலும் எங்களை இறையச்சம் உடையவர்களுக்கு முதன்மையானவராக ஆக்குவாயாக! என்று வேண்டுவார்கள்.*

*இத்தகையோருக்கு (நன்மையில்) நிலைத்திருந்த காரணத்திற்காக (சுவர்க்கத்தில்) மிக உயர்ந்த இடங்களை பரிசாகக் கிடைக்கும். அங்கு அவர்கள் வாழ்த்துடனும், சமாதானத்துடனும் வரவேற்கப்படுவர்.*

*அதில் என்றென்றும் தங்கிவிடுவர். அடைக்கலம் பெறுவதற்கும், என்றென்றும் வாழ்வதற்கும் அது தலைசிறந்த இடமாகும். (25 : 64-77)*

ரமலான் கழிந்த பிறகும் ரமலானில் எழுதப்பட்ட கடிதங்களும், அதற்குப் பிறகு எழுதப்பட்ட கடிதங்களும் வந்து கொண்டிருக்கின்றன.

நம்மிடத்தில் தூய மாற்றத்தை ஏற்படுத்த நாம் செய்த முயற்சிகளையும் – நம்மில் ஏற்படுத்தப்பட்டுள்ள தூய மாற்றங்களை நிலைநிறுத்தவும் அல்லாஹ் அருள்புரிவானாக! நம்மிடத்தில் உருவாகியுள்ள அந்த தூய மாற்றங்கள், எண்ணங்கள்தான் ரமலானின் நோக்கமாகும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் சில குறிப்பான அடையாளங்களைக் கூறியுள்ளான். அவற்றை மனிதன் கைக்கொண்டு அமல் செய்தால்தான் மனிதர்கள் இபாதுர் ரஹ்மான் (ரஹ்மானின் அடியார்கள்) என்று அழைக்கப்படத் தகுதியுடையவராவார்கள்.

நான் ஓதிய வசனத்தில் அந்த சிறப்பான பண்புகள் கூறப்பட்டுள்ளன. அதனை நீங்கள் கேட்டீர்கள். அதில் ஒரு மனிதனின் தனிப் பொறுப்புகள், சமுதாய பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. இறைவனது உரிமையைப் நிறைவேற்றுவதன் பக்கமும் கவனமூட்டப்பட்டுள்ளது. அவற்றை பெற முயற்சி செய்யும் போது அத்தகையவர்களை நோக்கி இறைவன் இபாதுர் ரஹ்மான் – அளவற்ற அருளாளனின் அடியார்கள் என்று அழைத்து தனது திருப்தி மற்றும் ஜன்னத்தின் நற்செய்தியை வழங்குகிறான்.

எனவே ரமலானுக்குப் பிறகும் இறைவன் கூறிய அவ்வழிமுறைகளின்படி செல்வோம் எனில், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவோம். அவனது ஜன்னத்திற்கு செல்பவர்களாகவும் அதில் பங்கு பெறுபவர்களாகவும் ஆவோம்.

இதனால் இறைவன் நம்மிடம் திருப்தி அடைந்து விடுவான். பிறகு நம்மிடம் உருவான தூய மாற்றங்கள் அப்படியே நம்மிடம் நிலைபெற்று விடும்.

இபாதுர் ரஹ்மான் – அளவற்ற அருளாளனின் அடியார்களின் ஒரு சிறப்புப் பண்பு **யம்ஷுூன அலல் அர்ளி ஹவ்னா** – அவர்கள் பூமியில் பணிவுடன் நடப்பார்கள். அவர்களின் ஒவ்வொரு தீர்ப்பும், முடிவும், நேர்மையானதாக இருக்கின்றன. தேவையற்ற கோபம் அவர்களிடம் வெளிப்படுவதில்லை. இதனால் பல நேரங்களில் தற்பெருமை ஏற்படுவதில்லை. பிறகு அவர்களிடம் குறுக்குவழியில் செல்லும் எண்ணம் ஏற்படுவதில்லை. பிறகு தாம் சென்றதை நினைத்து வெட்கப்படும் சூழ்நிலை அவர்களிடம் ஏற்படுகின்றது.

இந்த சிறப்புப் பண்புகளை இறைவன் சுட்டிக் காட்டியுள்ளது தனிப்பட்ட அளவில் மட்டுமல்ல. ஜமாஅத் அளவிலும் இவை இருக்க வேண்டிய அம்சங்களாகும். ஜமாஅத்திலும் ஒவ்வொரு மனிதரும் இவ்வாறு இபாதத்தில் மூழ்கிய அடியாராகி, இப்பண்புகளை வெளிப்படுத்த வேண்டும்.

பிறகு இதில் ஒரு முன்னறிவிப்பும் உள்ளது. இத்தகைய அளவற்ற அருளாளனாகிய அடியார்களுக்கு வெற்றியும் கிடைக்கும். வெற்றியின் சூழ்நிலை உருவாகும்போது கூட அவர்களிடம் தற்பெருமை உருவாவதில்லை. நடந்தவற்றிற்கு பழிவாங்கும் எண்ணம் அவர்களிடம் உருவாவதில்லை. மேலும் வெற்றியின் காலத்தில் இறைவனை மறந்தவர்களாகவும் ஆகிவிடக் கூடாது. மாறாக, பணிவு, உருக்கம், உரிமையைப் பேணுதல் ஆகிய கவனங்கள் இருக்க வேண்டும்.

**இரண்டாவது, ரஹ்மானின் அடியார்களிடம் உள்ள ஒரு சிறப்புப் பண்பு** அவர்களிடம் அறிவீனர்கள் விவாதம் செய்தால் சண்டை சச்சரவுகளிலிருந்து விலகியவாறு கடுமை காட்டுபவர்களுக்கு மென்மையுடன் புரிய வைக்க வேண்டும்.

மேலும் இறைவனது முதல் கட்டளையின் மூலம் நீங்கள் பணிவு என்ற குணத்தைப் பெற்றுள்ளீர்கள். அதே போன்று ஜமாஅத் அளவிலும், சமூகத்திலும் ஒரு தரத்தை நீங்கள் நிலைநாட்டியுள்ளீர்கள். பிறகு உங்களிடம் ஆற்றல் வந்த பிறகும் அதனை நினைவில் வைத்திருக்க வேண்டும். பல்வேறு வழிகளில் ஷய்த்தான் உங்களது உணர்வுகளைத் தூண்டி உங்களை கொதித்தெழ வைக்க முயற்சி செய்வான். பிறகு எத்தகைய அநீதியிழைக்கின்றவர்களாக இருக்கின்றனர் என்று உங்களைப் பார்த்து கூறப்படும். எனவே நீங்கள் உங்களை கட்டுப்படுத்தி வைக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், சஹாபாக்களும் காட்டிய முன்மாதிரியைக் கடைபிடிக்க வேண்டும். எனவே இதிலும் ஜமாஅத் அளவில் ஏற்படும் ஒரு முன்னேற்றம் பற்றிய முன்னறிவிப்பு உள்ளது. ஆனால் இப்போது சில நாடுகளில் – குறிப்பாக பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு துன்பம் கொடுக்கப்படுகிறது. அஹ்மதிகளுக்கு எப்படியாவது துன்பம் கொடுத்து, சட்டத்தை கையில் எடுக்க வைக்க வேண்டும். பிறகு அதையே காரணம் காட்டி அஹ்மதிகளை நசுக்கிவிட வேண்டும் என்று முயற்சிகள் செய்யப்படுகின்றன. எனவே சட்டத்திற்குள் இருந்து கொண்டு செயலாற்றுங்கள். தீமைக்கு தீமையின் மூலம் பதிலடி கொடுக்காதீர்கள். பிறகு அதனால் மற்ற அஹ்மதிகளுக்கு பிரச்சனைகள் எழும். எனவே இக்கால சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நான் அஹ்மதிகளிடம் கூறிக் கொள்வேன்.

நீங்கள் ரஹ்மானின் அடியார்களாக மாற முயற்சி செய்யுங்கள். அதன் மூலம் இறைதிருப்தியிலிருந்து பங்குபெற வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ் இதில் முன்னறிவிப்பும் வைத்துள்ளான். ஜமாஅத் அளவில் உங்கள் கை மேலோங்கும் இன்ஷா அல்லாஹ். அப்போது நீதி என்றால் என்ன? என்று உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும். அடுத்தவரின் உணர்வைப் புரிந்து கொண்டு தமது உணர்வை கட்டுப்படுத்துவது என்றால் என்னவென்று இவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். இன்றைய காலத்தில் பாகிஸ்தானில் பல்வேறு வகையில் நமது எதிரிகள் முயற்சி செய்கிறார்கள். எப்படியாவது அஹ்மதிகளின் கோபத்தை தூண்டிவிட வேண்டும் என்று நினைக்கின்றார்கள். அவர்களுக்கு இழப்பினை ஏறபடுத்த முடிந்தவரை முயற்சி செய்யப்படுகிறது. பலமான திட்டங்கள் தீட்டப்படுகின்றன. எனவே மிகவும் எச்சரிக்கையுடன் திட்டமிட்டு இந்நிலையை எதிர்கொள்ளுங்கள். துஆவுடன் அல்லாஹ்விடம் உதவி கேட்டவாறு இப்பிரச்சனையை எதிர்கொள்ளுங்கள்.

ரஹ்மானின் அடியார்களைப் பற்றி தெளிவுபடுத்தியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ரஹ்மானின் உண்மையான அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பார்கள். அறிவீனர்கள் அவர்களிடம் கடுமையாக நடந்து கொண்டால், அமைதியாக அவர்களை விட்டு நகர்ந்து விடுவார்கள். மிக மிக அறிவீனர்களோடு எதிர்கொள்ளும் நிலை நமக்கு ஏற்பட்டுளளது. எனவே நாம் மிகவும் கட்டுப்பாட்டுடன் நமது உணர்வுகளை கட்டுப்படுத்தி அமைதி, கருணையின் பண்பையே வெளிப்படுத்த வேண்டும்.

கடுமைக்கு எதிரில் மென்மையையும், ஏச்சுப்பேச்சுகளுக்கு எதிரில் துஆவையும் வைக்கின்றனர். ரஹ்மானின் கருணையைப் பிரதிபலிக்கின்றனர். ஏனெனில் சூரியன், சந்திரன் ஆகிய ரஹ்மானின் படைப்புகள் எந்தப் பாகுபாடுமின்றி படைப்பினங்களுக்கு தொண்டு செய்கின்றன. எனவே இந்த வசனத்தில் இறைவன் தெளிவாக விளக்கி விட்டான். இறைவனை ரஹ்மான் என்று கூறப்படுவதற்கு காரணம், அவனது பரந்த கருணை எல்லா நல்லவர், தீயவருக்கும் பொதுவாக பொழியப்படுகின்றது. எனவே இன்றும் வருங்காலத்திலும் எல்லா நல்லவர், தீயவர், நண்பர், பகைவர் அனைவரும் அல்லாஹ்வின் ரஹ்மத்தின் வெளிப்பாடாக ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மன்னிப்பு, கருணை போன்ற நடைமுறையை நம்மிடம்

வெளிப்படுத்த வேண்டும். துஆவுடன், அல்லாஹ்விடம் தமக்காகவும், மற்றவருக்காகவும் உதவி கேட்க வேண்டும். அதன் மூலமே நாம் எப்போதும் ரஹ்மானின் அடியார்களுடன் இணைய முடியும்.

பிறகு ரஹ்மானின் அடியார்களின் **மூன்றாவது சிறப்புப் பண்பு** அவர்கள் தமது ரப்பின் முன்பு இரவுகளை ஸஜ்தாவில் கழிக்கின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன் மிகப்பெரும் எண்ணிக்கையில் மக்கள் இரவில் அமல் செய்தனர். ஆனால் சில நாட்கள் இரவுகளை ஸஜ்தாவில் கழிப்பார்கள் என்று இறைவன் கூறவில்லை. மாறாக ரஹ்மானின் அடியார்கள் நிரந்தரமாக தமது இரவுகளை ஸஜ்தாவில் கழிக்கின்றனர். எனவே ஓர் அஹ்மதிக்கு இந்த சூழ்நிலையில் மிகப்பெரும் பொறுப்பு உள்ளது. உலகில் எல்லா முஸ்லிம் நாடுகளிலும் அஹ்மதிகளுக்கு இந்த சூழ்நிலையில் மிகப் பெரும் பொறுப்பு உள்ளது. உலகில் எல்லா முஸ்லிம் நாடுகளிலும் அஹ்மதிகளுக்கு துன்பங்களும், தொல்லைகளும் கொடுக்கப்படும் காலமாக இது இருக்கின்றது. எனவே பர்ள் தொழுகையை மட்டும் ஓர் அஹ்மதி நிறைவேற்றி விட்டு செல்பவராக இல்லாமல் தமது இரவுகளில் நஃபில்களை நிறைவேற்ற வேண்டும். தஹஜ்ஜுத்தில் கவனம் செலுத்துங்கள். ஏனெனில் இரவில் எழுந்திருப்பது மனதைக் கட்டுப்படுத்துவதற்குரிய ஒரு வழியாகும் என்று அல்லாஹ் கூறுகிறான். நாம் தூய்மையான முறையில் இரவில் இபாதத் செய்பவராகி விட்டோம் எனில், அதுவே ஜமாஅத்தின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குக் காரணமாக அமையும் இன்ஷா அல்லாஹ்.

இரவில் எழுந்திருப்பது சொந்த நோக்கங்களுக்காக மட்டும் இருக்கக் கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவும், துஆ செய்வதற்காகவும் இரவில் எழ வேண்டும். உலகில் ஒவ்வோர் அஹ்மதியும் தூய்மையான முறையில் இறைதிருப்தியை வேண்டியவாறு ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காக குறைந்தது 2 ரக்அத் நஃபில் தொழுவதை தம்மீது கடமையாக்கிக் கொண்டால், பிறகு இறைவனின் உதவி நமக்கு எவ்வாறு கிடைக்கிறது என்று பாருங்கள். பிறகு இறைவன் இந்த எதிரிகளின் பகைமைகள் எவ்வாறு சிதறடிக்கப்படுகின்றன என்று பாருங்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:**

மனிதன் செய்கின்ற நஃபில்கள் மூலம் இறைவன் எந்த அளவுக்கு மனிதனை நெருங்குகின்றான் எனில் இறைவன் கூறுகிறான். நான் அத்தகைய மனிதன் கேட்கும் காதாக நான் ஆகி விடுகிறேன். அவன் பார்க்கின்ற கண்ணாக ஆகி விடுகிறேன். அவன் பிடிக்கின்ற கையாகவும், அவன் நடக்கின்ற காலாகவும் நான் ஆகி விடுகிறேன். எனவே அல்லாஹ் நஃபில் தொழுபவர்களின், தஹஜ்ஜுத் தொழுபவர்களின் அருகில் வந்து விடுகிறான். எனவே அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற முயற்சி செய்யும் பொறுப்பு நமக்கு உள்ளது.

இரவில் நீண்ட நேரம் வரை வீணாக சபை கூடுவது தான் ரமலான் கழிந்ததற்கு அடையாளம் அன்று. சுபுஹ் தொழுவதற்கு எழுந்திருப்பதே கஷ்டமாகி விடும் அளவிற்கு இரவில் வீணாக கண்விழித்து இருப்பது ரமலான் முடிந்ததற்கு அடையாளமன்று. இறைவனை அருகில் கொண்டு வருவதும் நாம் இறைவனை நெருங்குவதுமான ஓர் இரவைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

ரமலான் நமக்கு ரஹ்மானின் அடியார்களாக ஆவதற்கான வழியைக் கற்றுத் தந்துள்ளது. அதன்படி அமல் செய்தவாறு இபாதத்துகளை தொடர்வது நமது பணியாக இருக்க வேண்டும். இதுவே நமது ஹக்கில் விரைவில் புரட்சியைக் கொண்டு வரும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பணியைச் செய்தார்கள். ஒரு புரட்சி ஏற்பட்டதை உலகம் கண்டது. பகலில் நிர்பந்தத்தின் காரணத்தால் யுத்தம் செய்ய வேண்டியது வந்து. இரவில் எழுந்து இபாதத்தில் கழித்தனர். இந்த இரவு நேரத் தொழுகையை நிலைநாட்டிய காலம் வரை முஸ்லிம்கள் முன்னேறிக் கொண்டிருந்தனர். இன்று அஹ்மதிகளின் பொறுப்பு இதன்படி அமல் செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அரபு நாடு மற்றும் உலகின் நிலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்த போது எவ்வாறிருந்தது என்பது யாருக்கும் தெரியாததன்று. காட்டுவாசிகளாக இருந்தனர். உண்ணல், குடித்தல் தவிர அவர்களுக்கு வேறு எதுவும் தெரியாது.

அவர்களின் நிலைமைகளைக் குறித்து இறைவனும் கூட கூறியுள்ளான். விலங்குகளைப் போன்று உண்ணல், குடித்தல் தவிர வேறு எதுவும் அவர்களிடம் இருந்ததில்லை.

பிறகு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய போதனை அவர்களிடம் எத்தகைய ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது எனில், **யபீதூன லி ரப்பிஹிம் ஸுஜ்ஜதவ் வகியாமா** – தங்கள் இறைவனுக்காக சிரம்பணிந்தும் நின்றும் (வணங்கியவர்களாக) இரவுகளைக் கழிப்பார்கள். (25:65) அல்லாஹ்! அல்லாஹ்! இது எத்தகைய ஒரு சிறப்பு! அம்மக்களிடையே ஈடிணையற்ற ஒரு புரட்சி உருவாகியது. அல்லாஹ்வுக்குரிய கடமையையும் அடியாருக்குள்ள கடமையையும் சரியான முறையில் நிறைவேற்றுபவர்களாக மாறினர். இறந்தவர்களை மிக உயரிய சமுதாயமாக உயிருள்ள மக்களாக மாற்றினர். அறிவு ரீதியாகவும், செயல் ரீதியாகவும் இரு சிறப்புகளும் அவர்களிடம் ஒன்றாக உருவாகி விட்டன. **யபீதூன லி ரப்பிஹிம் ஸுஜ்ஜதவ் வகியாமா** – தங்கள் இறைவனுக்காக சிரம்பணிந்தும் நின்றும் (வணங்கியவர்களாக) இரவுகளைக் கழிப்பார்கள். (25:65) இது அவர்களது அமலின் நிலையாக இருந்தது. அவர்களது மொழி வளம் மற்றும் படைப்புகள் (எழுத்தாற்றல்) ஒப்புமையற்றதாக இருந்தது. இது அவர்களது அறிவின் நிலைமையை எடுத்துக் காட்டுகிறது. பிறகு ஆன்மீகம், தூய்மை இல்லாமல் எந்த மார்க்கமும் செல்ல முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் அரபியர்களின் நிலை எவ்வாறிருந்தது? விலங்குகளைப் போன்று உண்ணல், குடித்தல் மட்டும் உள்ளவர்கள் ஆக இருந்தனர். அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதும் **யபீதூன லி ரப்பிஹிம் ஸுஜ்ஜதவ் வகியாமா** – தங்கள் இறைவனுக்காக சிரம்பணிந்தும் நின்றும் (வணங்கியவர்களாக) இரவுகளைக் கழிப்பார்கள். (25:65) என்பது அவர்களின் நிலையாக மாறி விட்டது.

வானத்திலிருந்து விஷத்தை முறிக்கும் மருந்து கிடைக்காத வரை உள்ளம் சரியாகாது. அவர் முன்னேறுவதற்குப் பதில் பின் தங்கிவிடுவார். மனிதன், சுய ஆரோக்கியமுள்ள தூய மனிதனாக இருக்கும் போது மட்டுமே மார்க்கத்தை நடத்திக் கொண்டு செல்ல முடியும். சுய ஆரோக்கியமற்ற ஒரு மனிதன் ஒரு மார்க்கத்தை உருவாக்கினாலும் அதனை நிலைநாட்ட முடியாது. எனவே நாம் ஜமாஅத் விரைவில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று விரும்புகிறோம். அல்லது ஜமாஅத்திற்கு வந்திருக்கிற பிரச்சனைகள் விரைவில் அகல வேண்டும் என்று விரும்புகிறோம். அதற்கு வானத்திலிருந்து விஷத்தை முறிக்கும் மருந்து கிடைக்க வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். வானத்தின் விஷத்தை முறிக்கும் மருந்து கிடைத்தாலும் அல்லாஹ்வின் முன் குனிந்து அவனது உதவியைக் கேட்டு அவனது போதனையின்படி நடப்பதன் மூலமே கிடைக்கும். அதற்கு அஹ்மதிகளுக்கு அல்லாஹ் நல்வாய்ப்பினை வழங்குவானாக!

ரஹ்மானின் அடியார்களின் **நான்காவது சிறப்புப் பண்பு** பற்றி வருகிறது. ரஹ்மானின் அடியார்கள் இறைவனிடம் நரக வேதனையிலிருந்து தூரமாகி விட வேண்டுவார்கள். நரகமும் இரு வகைப்படும். இவ்வுலகம் மற்றும் மறுவுலக நரகம் சில தீய செயல்களின் விளைவால் கிடைக்கிறது. எனவே ரஹ்மானின் அடியார்கள் எப்போதும் துஆ, இஸ்திக்ஃபார் செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வர முயற்சி செய்ய வேண்டும்.

உலகம் மற்றும் மறுமையின் இழிவுகளிலிருந்து நம்மை பாதுகாக்க துஆ வேண்டுங்கள். எல்லா வகையான உலக துன்பங்கள், உலக நரகங்களிலிருந்து இறைவன் பாதுகாப்பானாக! உலக முன்னேற்றம்,

உலகின் பளபளப்பு நம்மை அடிமையாக்கி விடக் கூடாது. இதுவும் நம்மை இறைவனை விட்டு தூரமாக்கி மறுவுலக நரகத்தில் கொணடு சேர்த்து விடும். பிறகு சந்ததிகள் பற்றிய கவலையும் நம்மை விட்டு அகல வேண்டும். நமக்குள் நமது உள்ளத்தில் நிம்மதியின்மை என்ற நெருப்பும் அகன்றுவிட வேண்டும்.

ரஹ்மானின் அடியார்களின் **ஐந்தாவது சிறப்புப் பண்பு** அவர்கள் வீண் விரயம் செய்வதில்லை. தமது சொந்த பொருட்களையும் காட்டுவதற்காக செலவழிக்கமாட்டார்கள். ஜமாஅத்தின் பொருட்களையும் யோசிக்காமல் செலவு செய்வதில்லை.

வீண் செலவுக்கு ஓர் உதாரணம் திருமண விழாவுக்காக செலவு செய்வது. இச்செலவு நம்மிடையே மிக அதிகமாக காணப்படுகிறது. ஒருவரை ஒருவர் பார்த்து பெருமளவில் உணவு சமைக்கப்படுகிறது. பாகிஸ்தானிலும் இது அதிக அளவில் நடக்கிறது. திருமண விருந்து, வலிமா விருந்துகள் சாதாரணமாக இருந்தாலே போதுமானது.

பிறகு திருமணத்திற்கு முன்பு மஹிந்தி அழைப்பு (விருந்து) என்ற ஒரு விருந்து வைக்கும் பழக்கம் உருவாகியுள்ளது. அதற்காக செலவு செய்யப்படுகிறது. பெண் வீட்டார் திருமண வீட்டை மெருகூட்ட வேண்டும் என்ற காரணம் காட்டி இதனை செய்கின்றனர். மஹிந்தி (மறு தோன்றி) விநியோகம் அதனை ஒட்டிய விருந்துகள் என்று அமர்க்களப்படுத்தப்படுகிறது. மறுதோன்றி வைப்பதும் மணமகளை மெருகூட்டுவதும், அழகுபடுத்துவதும் சரிதான். அதற்காக வீண் செலவுகளை நாளுக்குநாள் ஒருவரைப் பார்த்து ஒருவர் அதிகரித்துக் கொண்டே செல்கின்றனர். அதே போன்று பையன் வீட்டாரும் திருமண வீட்டிற்கு மெருகூட்ட வேண்டும் என்ற காரணம் காட்டி, பெரிய விருந்துகளை நடத்துகின்றனர். இன்னும் சில தீய சம்பிரதாங்களில் – இன்னும் சொல்லப்போனால் பித்அத்களில் நல்ல மார்க்க அறிவுள்ளவர்கள்கூட கலந்து கொள்கின்றனர். எனவே இது மாதிரி பெரிய அளவில் ஒருவர் விருந்து நடத்தாவிட்டாலும், அவர் ஒரு நல்ல எண்ணத்தில் அதனை தவிர்த்திருந்தாலும் மக்கள் அவரை பெரிய கஞ்சன் என்று கூறுகின்றனர். பாகிஸ்தானில் இதுபோன்ற விருந்துகள், நகைகளுக்கு அளவற்ற பணத்தை செலவு செய்கின்றனர். இவை அனைத்தும் வீண் விரயம் ஆகும். இவ்வாறு செலவழிக்கப்படும் பணத்தில் ஏழைகளின் திருமணத்தை நடத்தி வைக்கலாம். பல அனாதைகளை பராமரிக்கலாம். மற்ற நல்ல செலவுகளைச் செய்யலாம். இந்த வீண் செலவுகளில் இருந்து தப்பிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டால்தான் இதெல்லாம் சாத்தியமாகும். இதுவே மனிதனை ரஹ்மானின் அடியாராக மாற்றும்.

பிறகு ரஹ்மானின் அடியார்களின் **ஆறாவது சிறப்புப் பண்பு** அவர்கள் உலோபித்தனம், கருமித்தனம் காட்டுவதில்லை. சிலர் கருமித்தனத்தால் அனுமதிக்கப்பட்ட செலவுகளைக் கூட செய்வதில்லை. எல்லையற்ற கருமித்தனம் செய்கின்றனர். போகும் போது செல்வத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் அவ்வாறு செய்கின்றனர். சிலர் தமது சொந்த செலவுகளையும் கூட செய்வதில்லை. தமது உறவினர்களுக்கு உதவி செய்வதில்லை. அல்லது ஜமாஅத்திற்கு பொருள் தியாகம் செய்யும் உணர்வும் அவர்களிடம் இருப்பதில்லை. எனவே எவர் பணம் இருந்தும், செலவு செய்யும் தகுதி இருந்தும் செலவு செய்வதில்லையோ அவர்களும் இபாதுர் ரஹ்மான் – ரஹ்மானின் அடியார்கள் (என்ற தகுதியில்) வர முடியாது.

எனவே வீண் விரயம் செய்பவர்களை இறைவன் விரும்பாதது போன்று அவர்கள் தனது இபாதுர் ரஹ்மானிலிருந்து வெளியேறி இருப்பது போன்று, கருமித்தனம் காட்டுபவர்களையும் வெறுகின்றான். ரஹ்மானின் அடியார்களிலிருந்து வெளியேற்றி விடுகிறான். ஒரு சாரார் செலவு செய்வதின் உரிமையை சரியாக நிறைவேற்றுவதில்லை. மறுசாரார் பணத்தை தடுத்து வைத்துக் கொண்டு, பணத்தை பதுக்கி வைத்து சமுதாயத்தின் முன்னேற்றத்தையும் சேர்த்து தடுத்து விடுகின்றனர். எனவே ரஹ்மானின் அடியார்களிடம் வரம்புமீறிய செலவும் இருக்காது. அதனை உலகம் விரும்பினாலும் அவர்கள் செய்வதில்லை. மேலும் கருமித்தனமும் செய்வதில்லை. மாறாக, நடுத்தரத்தை கடைபிடிக்க வேண்டும். எனவே இபாதுர் ரஹ்மான் செலவு செய்வதும், செலவு செய்யாமல் இருப்பதும் இறைவனின் திருப்திக்காகவே இருக்கும்.

ரஹ்மானின் அடியார்களின் **ஏழாவது சிறப்புப் பண்பு** அவர்கள் இணைவைத்தலின் அருகில் செல்வதில்லை. அல்லாஹ்வின் பார்வையில் இது பெரும் அநீதியாகும். நான் எல்லா பாவங்களையும் கூட மன்னித்து விடுவேன். ஆனால் **ஷி**ர்க் செய்வதை மன்னிக்கமாட்டேன் என்று அல்லாஹ் கூறுகிறான். இபாதுர் ரஹ்மான் **ஷி**ர்க் செய்யமாட்டார் என்று கூறப்பட்டது. வெளிப்படையான சிலை வணக்கத்தில் இருந்து அவர்கள் விலகியிருப்பார்கள் என்ற பொருளில் அல்ல. மாறாக, மறைமுகமான **ஷி**ர்க்கிலிருந்து கூட விலகியிருப்பார்கள். அவர்களின் இபாதத், மற்ற உரிமைகளை வழங்குதல் அனைத்தும் இறைகட்டளைக்கேற்பவே இருக்கும். நுட்பமான முறையில் கவனம் செலுத்துகின்றனர். அவர்களின் எந்த செயலும் எந்த வகையான மறைமுக **ஷி**ர்க்கும் காரணமாக இருக்காது. மிக மிக எச்சரிக்கையாக இருக்கின்றனர். அவர்களின் உலகியல் பணிகள் இபாதத்துகளுக்கு குறுக்கே நிற்பதில்லை. நான் சென்ற குத்பாவில் அதுபற்றி விளக்கினேன். அதுவும் ஒருவகை மறைமுகமான **ஷி**ர்க் ஆகும்.

இபாதுர் ரஹ்மானின் **எட்டாவது சிறப்புப் பண்பு** நியாயமின்றி எவரையும் கொலை செய்யமாட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யுத்தம் செய்தார்கள். கலீஃபாக்களும் சஹாபாக்களும் கூட யுத்தம் செய்தார்கள். அவர்கள் தமது கைகளை அநீதியிலிருந்து தடுத்தவாறு செய்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் கலீஃபாக்களும் அவர்களுக்கு போதனை செய்தார்கள். எந்த பெண்களையோ, குழந்தைகளையோ, துறவிகள் பாதிரிகளையோ, தலைவர்களையோ கொலை செய்யக் கூடாது என்று அறிவுறுத்தினார்கள். ஆனால் இரண்டாவது உலகப் போரின் போது நாம் பார்த்துள்ளோம். இலட்சக்கணக்கான அப்பாவி ஜப்பானியர்கள் கொலை செய்யப்பட்டனர். இன்றும்கூட அமைதியை நிலைநாட்டும் சாக்கில் ஜிஹாத் செய்பவர்களை ஒடுக்கும் சாக்கில் அப்பாவி குடிமக்களை நசுக்கி விடுகின்றனர். மேலும் சிலர் தம்மை தமது கருத்தின்படி இபாதுர் ரஹ்மான் என்று கருதிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் அப்பாவிகளின் இரத்தத்தை சிந்தவே செய்கின்றனர். அல்லாஹ்வின் தீர்ப்பின்படி அவர்கள் ஒருபோதும் இபாதுர் ரஹ்மான் ஆக முடியாது.

இபாதுர் ரஹ்மானின் **ஒன்பதாவது சிறப்புப் பண்பு**, அவர்கள் விபச்சாரம் செய்யமாட்டார்கள். செயல்ரீதியாகவும் விபச்சாரம் செய்யமாட்டார்கள். மேலும் அசுத்தமான வீணான நிகழ்ச்சிகளை, காட்சிகளை பார்க்கவும் மாட்டார்கள். இக்காலத்தில் T.V., Internet –களில் காணப்படுகின்ற நிகழ்ச்சிகளுள் சில காட்சிகள் விபச்சாரத்தைச் சார்ந்தவை. எனவே இதிலிருந்து அஹ்மதிகள் குறிப்பாக தப்பித்து விட வேண்டும்.

இபாதுர் ரஹ்மானின் **பத்தாவது அடையாளம்**, அவர்கள் பொய் சொல்லவும் மாட்டார்கள்; பொய் சாட்சி சொல்லவும் மாட்டார்கள். பொய்யும் சமுதாயத்தின் வீழ்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. எனவே அல்லாஹ்வின் அடியார்கள் இறை ஜமாஅத்தின் உயரத்தை நோக்கி செல்ல வேண்டும். மேலும் அல்லாஹ் அவர்களின் முன்னேற்றத்திற்கு மேல் முன்னேற்றம் பெற்றுக் கொண்டே செல்வதற்கான வாக்குறுதியும் வழங்கியுள்ளான். அவர்களிடம் பொய் வந்து விட்டால், இறைவனின் சிறப்பான அடியார்களுள் வர இயலாது. எவருக்கு அல்லாஹ் அருள் செய்கின்றானோ அல்லது அருள் செய்வதாக வாக்குறுதி அளிக்கின்றானோ அவர்களிடம் (பொய்) வர இயலாது. எனவே அஹ்மதிகள் தமது சாட்சிகளிலும், தமது விவகாரங்களிலும் நூற்றுக்கு நூறு உண்மையைப் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக, குடும்பப் பிரச்சனைகளை எடுத்துக் கொள்கிறோம். நிகாஹ் அறிவிப்பின் போது இந்த சாட்சியுடன் நிகாஹ் நடைபெறுகிறது. இன்னார் இன்னின்ன காரியங்களுக்கு சாட்சியாக இருக்கின்றனர் என்று கூறும்போது அவை உண்மை(சாட்சி)யாக இருக்க வேண்டும். பேச்சு நேர்மையானதாக இருக்க வேண்டும். அதில் வேறு அர்த்தங்கள் இருக்கக் கூடாது. பல நேரங்களில் திருமணத்திற்கு பிறகு பெண்கள் ஆண்களிடம் தவறான விளக்கம் அளிக்கின்றனர். அல்லது பையன்கள் பெண்களிடம் தவறான விளக்கம் அளிக்கின்றனர். அல்லது சம்பந்திகள் ஒருவருக்கொருவர் முன்னர் அறிவிக்கப்பட்டதற்கு தவறான விளக்கம் அளிக்கின்றனர். இவ்வாறு அந்த சம்பந்தமே தடுமாற ஆரம்பித்து விடுகிறது. பிறகு சிறிது சிறிதாக முறிந்தே போய் விடுகிறது. ஆக சுய விருப்பங்கள், கர்வத்தை நிலைநாட்டுவதற்காக எதையாவது தருவதாக கூறி விடுகின்றனர். பிறகு பிரச்சனை வரும் போது குழந்தைகள் உருவாகி விட்டால் அதனால் குழந்தைகளும் சேர்ந்து நாசமாகி விடுகின்றன. எனவே அல்லாஹ்வின்

உரிமையை வழங்குவதற்கும் சரி, அடியார்களுக்குள்ள உரிமையை வழங்குவதற்கும் சரி, எல்லா வகையான பொய்யையும் வெறுப்பது அவசியமாகும். அப்போதுதான் இவர்கள் இபாதுர் ரஹ்மானில் இணைய முடியும்.

இபாதுர் ரஹ்மானுக்கு **பதினோராவது அடையாளம்**, *உலக இரசனைகளால் ஈர்க்கப்பட்டு அதில் முற்றிலும் கலந்துவிட மாட்டார்கள்.* இக்காலத்தில் வீணான காரியங்கள் என்பது Internet –ல் உள்ள சில நிகழ்ச்சிகள் மற்றும் பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மூழ்கி விடுதல் ஆகும்.

இன்று பையன்களும், பெண்களும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் குரூப் குரூப் ஆக சுற்றுகின்றனர். நடனம், பாட்டு போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். அதற்காக நிகழ்ச்சிகள் உருவாக்கப்படுகின்றன. அல்லது அது போன்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒரு மூஃமினைப் பொருத்தவரை இவை அனைத்தும் வீணான காரியங்களாகும். ஒருபுறம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கையில் பைஅத் உறுதிமொழி எடுத்துள்ளனர். நாங்கள் இபாதுர் ரஹ்மான் ஆவதற்கும் கூட அதன் மூலம் உறுதி எடுத்துள்ளோம். பிறகு அதற்குப் பிறகும் வீணான விஷயங்களில் ஈடுபடுவது நல்லொழுக்கத்தை அழிக்கும் வேலையாகும். உண்மையான ஓர் அஹ்மதி இதிலிருந்து விலக வேண்டும். பிறகு வீணான காரியங்களில் சண்டை சச்சரவுகளும் அடங்கும். முதலில் அதனைப் பற்றி விளக்கமாக கூறியுள்ளேன். இதுவும் சமுதாயத்தை அழிக்கும் விஷயமாகும். வீணான செயல்களாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**வ இஸா மர்ரு பில்லக்வி மர்ரு கிராமா** – ஏதாவது வீணானதை கடந்து செல்லும் போது (அதில் ஈடுபடாமல் கண்ணியத்துடன் கடந்து சென்று விடுவார்கள்.) அதாவது சண்டை உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டால் கண்ணியமான முறையில் நாகரிகமாக அதனை தவிர்த்து விடுவார்கள். ஒவ்வொரு விஷயத்தையும் விவாதப் பொருளாக்குவதில்லை. சமாதானத்தை நிலைநாட்டும் இடம் இதுவேயாகும். விவாதங்களை தவிர்த்து மன்னித்து விடுங்கள். அரபியில் **லகூ** (வீணானது) என்ற அரபி சொல்லின் பொருள் ஒரு மனிதர் சுயநலத்திற்காக கூச்சலிடுவது அல்லது தனக்கு நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்காக ஏதேனும் வீணான விவாதத்தில் ஈடுபடுவது. எனவே இதுபோன்ற செயல்களிலிருந்து விலகி, சான்றாண்மையை செயலில் கொண்டு வாருங்கள்.

பிறகு இபாதுர் ரஹ்மானின் **பன்னிரண்டாவது அடையாளம்**, அவர்களுக்கு முன்னால் இறைவனின் வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டால் செவிடர்களைப் போன்றும் குருடர்களைப் போன்றும் அலட்சியமாக இருக்கமாட்டார்கள். கவனத்துடன் கேட்பார்கள். குர்ஆனிலிருந்து ஓர் ஆதாரம் காட்டப்பட்டால் அதன்படி அமல் செய்ய முயற்சி செய்வார்கள். தமது ஆன்மீகத்தை வளர்ச்சியடையச் செய்ய விரும்புவார்கள். எனவே இபாதுர் ரஹ்மான் ஆவதற்கு எல்லா வகையான நற்செயல்களையும் செய்ய முயற்சி செய்ய வேண்டும். யார் சொல்கிறார்கள் என்று பார்க்காமல் ஒரு விஷயம் அல்லாஹ் ரஸுலிடமிருந்து சொல்லப்பட்டதாக காட்டப்படும் போது அதனை அமல் செய்ய முயற்சி செய்வர். அதனை அமல் செய்யவில்லையெனில் அதனால் மனிதன் தடுமாறுவதற்கு காரணமாகி விடும். பிறகு அம்மனிதர் இபாதுர் ரஹ்மானின் பட்டியலில் இருந்து விலகி பிறகு படிப்படியாக ஜமாஅத்தை விட்டு விலகி விடுவார்.

இபாதுர் ரஹ்மானின் **பதிமூன்றாவது சிறப்புப் பண்பு**, தமது மனைவி மக்களுக்காக துஆ செய்வார்கள். தமது மனைவி, குழந்தைகளை தமது கண்களுக்கு குளிர்ச்சி ஆக்கும்படி வேண்டுவார்கள்.

பிறகு வருங்கால சந்ததிகளின் நிலைப்பாட்டிற்கு இது மிக மிக அவசியமானதாகும். வெளிப்படையான முயற்சிகளை தமது சந்ததிகளுக்காக மனிதன் செய்கின்றான். மார்க்க உலகில் முன்னேற்றத்தை தமது சந்ததிகள் அடைவதற்காக முயற்சி எடுக்கிறார். அதே வேளையில் துஆவும் செய்ய வேண்டும். ஏனெனில் இவை அனைத்தும் இறைவனிடமே உள்ளது. அவனே விளைவுகளை உருவாக்குகிறான். ஒருவர் தமது சொந்த திறமையால் தமது குழந்தைகளுக்கு தர்பிய்யத் கொடுப்பதாக கருதினால் அது முற்றிலும் தவறாகும். அவ்வாறு எண்ணுபவர்கள் உலகியல்வாதிகள் ஆவர். அவர்கள் உலகவாதிகளைப் பார்த்து அல்லாஹ்வின்

ரஹ்மானிய்யத்தில் இருந்து உலக பயனை மட்டும் பெறுகின்றனர். மாறாக ரஹ்மானின் அடியார்கள் என்று அழைக்கப்படத் தகுந்தவர்களாக இல்லை. அவர்கள் முத்தகீன்களின் இமாம் ஆகும் கண்ணியம் பெறவில்லை. முத்தகீன்களின் இமாம் ஆகும் போதுதான் தக்வாவில் முன்னேறும் கவனம் ஏற்படும். பிறகு தனது சந்ததிகள் தக்வாவில் முன்னேறுவதற்காகவும் துஆ கேட்பார்கள். அவர்கள் உலகியல் முன்னேற்றத்திற்காக கேட்கமாட்டார்கள். மாறாக சந்ததிகள் மார்க்க – மறுஉலக முன்னேற்றத்திற்காக துஆ செய்வார்கள். பிறகு தானும் தக்வாவில் முன்னேற முயற்சி செய்வார். அல்லாஹ்வின் வெகுமதிகளைப் பெறுவதற்கு முயற்சி செய்வார். இன்று உலகில் குழந்தைகளின் உலகியல் முன்னேற்றத்திற்காகவும் கல்விக்காகவும் பெற்றோர் மிகவும் கவலைப்படுகின்றனர். ஆனால் தமது குழந்தைகளின் ஆன்மீகத்தின் பக்கம் மிகக் குறைந்த கவனமே உள்ளது. இங்கு மேற்கத்திய நாடுகளில் சுதந்திரத்தின் பெயரால் தமது சந்ததிகளை மிகவும் தூய்மையற்றவர்களாக்கி விட்டனர். பெற்றோரின் போதனையையும் பிள்ளைகள் மறுத்துக் கொண்டே செல்கின்றனர். இப்போதுதான் இங்குள்ள பெற்றோருக்கு உணர்வு ஏற்பட்டுள்ளது. நாம் தேவைக்கு அதிகமாகவே குழந்தைகளுக்கு சுதந்திரம் தந்து விட்டோம். இது சம்பந்தமான நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் வரத் தொடங்கியுள்ளன. பெற்றோர்கள் எங்கே பிள்ளைகளின் இமாம் ஆவது? பிள்ளைகள்தான் இப்போது பெற்றோரின் முன் நிற்கின்றனர். நிறைய முகங்கள் அவ்வாறு உள்ளன. பிள்ளைகள் பெற்றோருக்கு எதிராக கையை உயர்த்தத் தொடங்கி விட்டனர். சிறு விஷயத்தையும் குழந்தைகள் சகிப்பதில்லை. பிடிவாதம் பிடிக்கின்றனர். இப்போது பெற்றோர்கள் எழுந்துள்ளனர். வருங்கால சந்ததிகளை காப்பாற்ற வேண்டுமானால் இவர்களின் சுதந்திரத்திற்கும் ஓர் எல்லை விதிக்க வேண்டும் என்று புரிய ஆரம்பித்துள்ளனர். குழந்தைகளுக்கு தண்டனை தர வேண்டும் என்ற அளவுக்கு பெற்றோர் சகிப்புத்தன்மையில் எல்லையை தொட்டு விட்டனர். பெற்றோர் ஏதாவது தண்டனை தரப்பட்டாலும் இந்த மேற்கத்திய நாடுகளில் சந்ததிகள் பெற்றோரை மிரட்டுகின்றனர். நாங்கள் எங்காவது வெளியில் போய்விடுவோம் என்கின்றனர். எனவே குழந்தைகள் அளவுக்கு மீறி அசுத்தமாகி விட்டனர். சில குடும்பத்தில் உள்ள சந்ததிகளின் கொடுக்கல் வாங்கல் கூட சரியாக இருப்பதில்லை. இவற்றிற்கெல்லாம் மிக முக்கிய காரணம் துஆவின் கட்டம் காலியாக உள்ளது. நீங்கள் குழந்தைகளுக்காக துஆ செய்யுங்கள். பிறகு நல்ல தர்பிய்யத் ஏற்படுவதற்கு உங்களது சரியான முன்மாதிரியையும் நிலைநாட்டுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பிறகு இன்னொரு விஷயம், குழந்தைகள் வேண்டும் என்று பலரும் விரும்புகின்றனர். ஆனால் அக்குழந்தைகள் மிகச் சிறந்த ஒழுக்கம், இறைவனது கட்டுப்பட்ட அடியார்களாவதற்காக சரியான கோணத்தில் வளர்கிறார்களா என்று ஒருபோதும் பார்ப்பதில்லை. ஒருபோதும் அவர்களுக்காக துஆ செய்வதும் இல்லை. தர்பிய்யத் கொடுப்பதிலும் கவனம் செலுத்துவதில்லை. எப்படி தர்பிய்யத் கொடுப்பது எந்தெந்த வயதில் என்ன விஷயங்களை சொல்லித்தர வேண்டும். எப்படி பராமரிக்க வேண்டும்? என்ற கவனம் இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் எனது நண்பர்கள், குழந்தைகள், மனைவி ஆகியோருக்காக துஆ செய்யாத எந்தவொரு தொழுகையும் இல்லை. பல பெற்றோர்கள் தாமே குழந்தைகளுக்கு சில தீய விஷயங்களைக் கற்றுத் தந்து விடுகின்றனர். குழந்தைகள் சில தீய விஷயங்களை தொடக்கத்தில் கற்றுக் கொண்டு விட்டால் பிறகு அவற்றை விட முடியாது. பிறகு நாளுக்கு நாள் அதனைச் செய்வதில் துணிச்சல் உண்டாகி, அசுத்தமாகிக் கொண்டே செல்கின்றனர்.

குழந்தை வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் மார்க்கத்தின் சேவகர்களாக ஆக வேண்டும் என்பதற்காக அல்ல. உலகில் தமக்கு ஒரு வாரிசு வேண்டும் என்று நினைக்கின்றனர். ஒரு வாரிசு உருவான பிறகு அதைப் பற்றி கவலைப்படுவதும் இல்லை. அவற்றை சீர்திருத்துவதும் இல்லை. எதுவும் கற்றுக் கொடுப்பதும் இல்லை. ஒருவர் என்னிடம் கூறினார். ஸ்கூலில் ஒரு அஹ்மதி முஸ்லிம் சிறுமியைப்

பார்த்து அதன் சக மாணவி, நீங்கள் எல்லாம் படைத்தவனை வணங்குவதில்லை. ஷய்த்தானை வணங்குகிறீர்கள் என்று கூறியிருக்கிறாள். இந்த அஹ்மதி மாணவி வயது வந்த பெண்ணாக இருந்தும் இதற்கு என்ன பதில் கொடுப்பது என்று தெரியாமல் மவுனமாகி விட்டாள். அஹ்மதிகள் இறைவனை நம்புவதில்லை என்று கூறியதும் அதன் தாக்கம் அந்த அஹ்மதி சிறுமியிடம் ஏற்பட்டிருக்கும். அதற்கு பதில் சொல்ல அஹ்மதி சிறுமியால் முடியவில்லை என்பதற்கான காரணம் பெற்றோர் குழந்தைகளுக்கு அடிப்படையான விஷயங்களைக் கூட கற்றுக் கொடுக்கவில்லை. அவர்களின் நல்லொழுக்கத்தை சீர்படுத்த முயலவும் இல்லை.

எனவே நல்லொழுக்கத்தை சிறு வயதிலேயே சீர்படுத்தி விட்டால் அதற்கு முன்னால் எவரும் நிற்க முடியாது. எந்த அவதூறும் கூற முடியாது. முதலில் சிறுமிகளின் ஆடைகள் பற்றி 4-5 வயதிலேயே கவனமூட்டி விட்டால் வளர்ந்த பிறகும் நல்ல ஆடைகளை அணிய வேண்டும் என்ற உணர்வு இருக்கும். 13-14 வயதில் குழந்தைகளிடம் கோட் அணியுமாறு கூறினால் எதிர்விளைவுதான் ஏற்படும். பிறகு அவர்களின் நல்லொழுக்கத்தை சரி செய்ய இயலாது. எனவே நினைவில் கொள்ளுங்கள். பிறகு ஈமானும் சரியாகாது. நெருங்கிய தொடர்புகளைப் புரிந்து கொள்ளவும் இயலாது. பிறகு அத்தகைய சந்ததிகளிடம் என்ன நன்மையை எதிர்பார்க்க முடியும். இறைவன் குழந்தைகளின் தர்பிய்யத் குறித்து இவ்வாறு கவனமூட்டுகிறான். **ரப்பனா ஹப்லனா மின் அஸ்வாஜினா வமின் துர்ரி ஆத்தினா குர்ரத்த அயுனின் வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா** – எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சியாக்கி வைப்பாயாக. அப்போதுதான் கட்டுப்படாமை, தீமை மிகுந்த வாழ்விலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைக்கும். மேலும் அவர்கள இபாதுர் ரஹ்மானின் வாழ்க்கை வாழ இயலும். எல்லாவற்றிலும் இறைவனுக்கு முக்கியத்துவம் தருபவர்களாக முடியும். வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா – சந்ததிகள் தூய முத்தகிகளாக இருந்தால் இவர்கள் தமது சந்ததிகளுக்கு இமாமாக இருப்பர். இதில் தாம் முத்தகியாக மாறுவதற்கும் துஆ உள்ளது. சந்ததிகள் முத்தகியாவதற்கு ஒருவர் தாம் முத்தகியாக இருப்பது நிபந்தனையாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். எனவே ஒருவர் தாம் முத்தகியாவதற்கும் துஆ செய்ய வேண்டும். பிறகு முத்தகி ஆவதற்கு முயற்சி செய்யும் போது இறைவன் இபாதுர் ரஹ்மானுக்கு கூறிய சிறப்புப் பண்புகள் அவரிடம் உருவாகும். பிறகு அவை அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

எவர் அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பு வைத்து தனது உட்புறத்தை தூய்மையாக வைக்கின்றார்களோ அவர்களே இறைவனிடத்தில் மிகவும் கண்ணியத்திற்கு உரியவரும், இறைவனால் சிறப்பாக பாதுகாக்கப்படுபவரும் ஆவர். மேலும் அம்மக்கள் மனித குலத்தின் மீது அனுதாபத்துடன் நடந்து கொள்பவர்களாகவும் விளங்குவர். இறைவனின் உண்மையான கட்டுப்பட்ட அடியார்களாக விளங்குவர். இதுவே உண்மை அஹ்மதிகளின் பண்புகளாகும். இறைவனுடன் உண்மையான தொடர்புள்ளவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. நமது உட்புறம் நிரந்தரமாக தூய்மையானதாக இருக்கட்டுமாக. நாம் இபாதுர் ரஹ்மான் ஆவதற்கு தகுதியான எல்லா சிறப்புகளையும் பெறுவோமாக!

அல்லாஹ் நம்மை எப்போதும் தனது நிரந்தர சொர்க்கத்திற்கு வாரிசாக்குவானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 25.09.2009**

Translated by : **Muallim M. NIZAMUDDIN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**